ADM COURT, SANKARANKOVIL.

**தேதி 21/12/2018**

**அசல் வழக்கு எண். 115/2014**

**வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியப்பிரமாணத்தின் பேரில் 1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

வழக்கு சொத்தை நாங்கள் கடந்த 40 வருடங்களாக அனுபவம் செய்து வருகிறோம். வழக்கு சொத்தில் நான் ஜவுளிக்கடை வைத்துள்ளேன். வழக்கு சொத்திற்குரிய மாத வாடகைய 1, 2 பிரதிவாதிகளிடம் செலுத்தி வருகிறேன். நான் செலுத்தும் வாடகைக்கு 1, 2 பிரதிவாதிகள் உரிய ரசீது தந்து விடுவார்கள். 3, 4 பிரதிவாதிகள் எனது அனுபவத்தை இடைஞ்சல் செய்ததால்தான் அவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கு தாக்கல் செய்ய 3,4 பிரதிவாதிகள் மட்டுமே காரணமாவார்கள். 1, 2 பிரதிவாதிகள் எனது அனுபவத்தை இடைஞ்சல் செய்யவில்லை. இந்த வழக்கில் 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். 3,4 பிரதிவாதிகளிடம் நான் இதுவரை வாடகை செலுத்தியது கிடையாது. இந்த வழக்கில் 3,4 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த வாடகை ரசீதுகள் மோசடியானவை. நான் எந்த காலத்திலும், 3,4 பிரதிவாதிகளிடம் வாடகை செலுத்தவில்லை. 3, 4 பிரதிவாதிகளிடம் நான் வாடகை செலுத்தியது சம்பந்தமாக ரசீதுகள் எதுவும் என்னிடம் இல்லை. 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்குமூலம் இல்லாத நிலையிலும், அவர்களை பொறுத்து எவ்வித பரிகாரம் கோராத நிலையிலும், இந்த வழக்கு 1, 2 பிரதிவாதிகளின் நிறையீட்டு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யபடவேண்டியது என்றால் சரியல்ல.

**3,4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**